**சிறுக்களஞ்சி ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை திருமதி.T.ஜெயக்கொடி**

**ந.க.எண்:09/2023** **நாள்: 12.07.2023**

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு-ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் - சிறுக்களஞ்சி ஊராட்சி சிறுக்களஞ்சி கிராமம் ரீ.ச.எண்: 340/2B3-ல் 2.40 ஏக்கர் பரப்பளவில் அமையும் - "சரஸ்வதி நகர்" குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்:79 விட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3), நாள்:04.05.2017
2. அரசாணை எண்:138 விட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3), நாள்:04.06.2004
3. அரசாணை எண்:141 விட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:23.09.2022 மற்றும் 16.07.2022
4. அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி (1) துறை, நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி (1) துறை, நாள்:31.01.2020
5. அரசு கடிதம் எண்:19113/நவ4(3)/2017-1, விட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:30.08.2017
6. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:13686/2017/LA1 நாள்:08.09.2017
7. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:320/2022/TCP3 நாள்:07.01.2022
8. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019/TCP2 நாள்:14.08.2021
9. ஊத்துக்குளி சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவணம் எண்:2235/2023 நாள்:15.05.2023 மற்றும் ஆவணம் எண்:2236/2023 நாள்:15.05.2023
10. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு மாவட்டம் அவர்களின் அலுவலக ந.க.எண்:ERD/ ZCUFYMYS /2022/TCP நாள்:29.05.2023
11. சிறுக்களஞ்சி ஊராட்சி மன்றத்தீர்மானம் எண்:52 நாள்:12.07.2023

* * * * * * * * * * * * * *

**உத்தரவு:**

ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், சிறுக்களஞ்சி ஊராட்சி சிறுக்களஞ்சி கிராமம் ரீ.ச.எண்: 340/2B3-ல் 2.40 ஏக்கர் பரப்பளவில் உள்ள பூமியில் தற்காலம் "சரஸ்வதி நகர்" என பெயரிடப்பட்ட 29 விட்டு மனைகளை கொண்ட மனைப்பிரிவில், ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது உபயோக இடத்தையும் சாலைகளையும் பார்வை(9)-ல் கனும் தான பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதையடுத்து குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள பார்வை(10)ல் காணும் ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், அவர்களின் மனைப்பிரிவு வரைபடி அனுமதி எண்:220/2023-ன்படி ஊராட்சி மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள்யாவும் செலுத்தப்பட்டுள்ளதால் பார்வை (11)ல் காணும் சிறுக்களஞ்சி ஊராட்சி தீர்மானத்தின்படியும் மற்றும் கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு திரு.P.ஜீவான்ந்தம் த/பெ பழனிச்சாமி, 109, ஜீவாபவனம், சென்னிமலை ரோடு, சரஸ்வதி நகர், பெருந்துறை, ஈரோடு என்பவருக்கு மனைப்பிரிவு வரைபட அனுமதி / இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. ஈரோடு மாவட்டம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு வரைபட அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.

2. எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அந்தக் காரணம் தவிர வேறு எந்தக் காரணத்திற்கும் உபயோகிக்க கூடாது.
3. மனைப்பிரிவு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர வேறு ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டுமென அறிவித்தாலும், கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரது பொறுப்பாகும்.
4. மனைப்பிரிவில் அமையும் மனைகளில் ஊராட்சியில் கட்டிட அனுமதி பெற்ற பின்னரே கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படவேண்டும்
5. மத்திய மாநில அரசின் இதரதுறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.
6. மேலே கண்ட நிபந்தனைகள் ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் இருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவர் ஆவார்
7. மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெறப்பட்ட உடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/எவ்வித விடுதலுமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6"x4" என்ற அளவில் நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. வரைபடம் அங்கீகாரம் 1994 வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊர்கள் மற்றும் நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்.
9. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.
10. மேலே கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டால் அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

தலைவர்,
சிறுக்களஞ்சி ஊராட்சி

பெறுதல்:

திரு.P.ஜீவானந்தம்
த/பெ பழனிச்சாமி,
109, ஜீவாபவனம்,
சென்னிமலை ரோடு,
சரஸ்வதி நகர்,
பெருந்துறை, ஈரோடு

நகல் :

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு, ஈரோடு மாவட்டம்
2. சார்பதிவாளர், ஊத்துக்குளி சார்பதிவாளர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம்
3. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), சென்னிமலை, ஈரோடு மாவட்டம்